


**13. 11. 2025**

## தலைப்புச் செய்திகள்

**1.** ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்திரவாத திட்டம் சுய சார்பு நாடாக நம் தேசம் உருவெடுக்க வழிகோலும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**2.** பீஹார் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

**3.** தமிழ்நாட்டில் மகளிர் நல வாழ்விற்கான நடமாடும் மருத்துவ சேவை திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**4.** புதுக்கோட்டை திருச்சி சாலையில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக பயிற்சி விமானம் இன்று அவசரமாக தரையிறக்கப்பட்டது.

**5.** உலக கோப்பை ஃபிடே செஸ் போட்டியின் 4ஆவது டை பிரேக்கர் சுற்றில் இந்திய வீரர்கள் இன்று களமிறங்குகின்றனர்.

## இனி விரிவான செய்திகள்

*************

### பிரதமர்

மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ள ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்திரவாத திட்டம் உலக அளவில் சந்தை போட்டிகளை அதிகரிக்கும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் சுமூக வர்த்தக வணிக செயலாக்கத்தை உறுதி செய்வதோடு நம் நாடு சுய சார்பு நாடாக உருவாக வழிகோலும் என்று தமது சமூகவலைதள பதிவில் கூறியுள்ளார்.

சிறு குறு நடுத்தர தொழிலமுனைவோர், முதல்முறை ஏற்றுமதியாளர்கள், தொழிலாளர் நலன் சார்ந்த பிரிவுகள், இதனால் பயன்பெறும் என்றும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்த திட்டம் பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதால் வலுவான பலன்கள் கிட்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரிய வகை கனிமங்களுக்கான விலை நிர்ணயத்திற்கான மத்திய அரசின் முடிவால் தன்னிறைவும் நீடித்த நிலைத்தன்மையும் எட்டப்படும் என்றார்.

இதனால் விநியோக சங்கிலிகள் வலுவடைந்து புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*************

**பிரதமர் கோவை**

பிரதமர் திரு.நரேந்திரமோடி வரும் 19 ஆம் தேதி கோவையில் தென்னிந்திய இயற்கை வேளாண் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக வரும் 19ஆம் தேதி கோவை வருகிறார்.

இயற்கை வேளாண்மை குறித்து தென் மாநிலங்களை சேர்ந்த 50 விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடுகிறார்.

*************

**குடியரசு தலைவர்**

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு போட்ஸ்வானா பயணத்தின் இறுதிகட்டமாக இந்திய வம்சாவளியினரிடையே இன்று கலந்துரையாடுகிறார்.

இதனிடையே சிறுத்தைகள் இடப்பெயர்வு திட்டத்தின் கீழ் குடியரசு தலைவர் முன்னிலையில் போட்ஸ்வானா - இந்தியாவிடம் சிறுத்தைகளை இன்று ஒப்படைக்கிறது.

இச்சிறுத்தைகள் மத்திய பிரதேச மாநிலம் குனோ தேசிய பூங்காவில் விடப்படும்.

*************

**அனுப்பிரியா பட்டேல்**

அனைவருக்கும் வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன் சுகாதாரம் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி பிரிவில் இந்தியா வேகமாக முன்னேறி செல்வதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் 114ஆவது நிறுவன தினத்தை ஒட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஆராய்ச்சி அறிவுசார் உச்சி மாநாட்டில் அவர்உரையாற்றினார்.

மருத்துவ துறையில் சாதனை புரிந்தோருக்கு விருதுகள் மற்றும் பதக்கங்களையும் அமைச்சர் வழங்கினார்.

*************

**பீஹார்**

பீஹார் மாநிலத்தில் 243 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இரண்டு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

இதற்காக 38 மாவட்டங்களில் 46 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும்.

வாக்கு எண்ணிக்கைக்காக 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

*************

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் மகளிர் நல வாழ்விற்கான நடமாடும் மருத்துவ சேவை திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரைவில் விரிவு படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் புற்றுநோய் தடுப்பு திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ ஊர்திகளை இன்று பார்வையிட்ட முதலமைச்சர் தமது சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் தொடங்கி வைக்கப்படும் இந்த நடமாடும் ஊர்தி சேவை மூலம் மார்பக புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய் போன்றவை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து மகளிர் தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

தலா ஒருகோடியே 10 லட்ச ரூபாய் மதிப்பில் வடிவமைக்கப்பட்டுள்ள 38 ஊர்திகள் விரைவில் பயன்பாட்டிற்கு வர உள்ளன.

இதனிடையே சமூகநலன், மகளிர் உரிமைத்துறை சார்பில் திருப்பத்தூர், நாமக்கல், மயிலாடுதுறை, புதுக்கோட்டை அரியலூர் உள்ளிட்ட இடங்களில் 62அரை கோடி ரூபாய் மதிப்பில் 12 புதிய தோழி விடுதிகள் கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய முதலமைச்சர், திருச்சி மற்றும் கோவையில் அரசினர் கூர்நோக்கு இல்ல புதிய கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

காஞ்சிபுரம் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் புனரமைக்கப்பட்ட விற்பனை வளாகத்தை திறந்துவைத்ததுடன், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 233 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

*************

## அகவிலைப்படி

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதார்களுக்கு 3 சதவிகித அகவிலைப்படி உயர்வு வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இவ்வுயர்வு முன்தேதியிட்டு வழங்கப்படும்.

இதன்மூலம் 16 லட்சம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர்.

*************

## கே.என்.நேரு

தமிழக அரசு அனைத்து தரப்பு மக்களுக்கான திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய காவிரி பாலம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில் சம்மந்தப்பட்டவர்களுக்கு ஸ்ரீரங்கம் பகுதியில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக மீன்வளத்துறை மற்றும் நீர்வளத்துறை சார்பில் முக்கொம்பு கொள்ளிடம் காவிரி ஆற்றில் 4 லட்சம் மீன்குஞ்சுகளை விடும் பணிகளையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

மணப்பாறை அரசு மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பில் தீவிர அவசர சிகிச்சை பிரிவு கட்டுமான பணிகளையும் தொடங்கிவைத்தார்.

*************

## அன்பில் மகேஷ்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நாளை 2024-25 ஆம் கல்வி ஆண்டில் மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளுக்கான விருது வழங்கும் விழா நடைபெறுகிறது.

மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இவ்விருதுகளை வழங்குகிறார்.

*************

## விமானம்

புதுக்கோட்டை திருச்சி சாலையில் கீரனூர் அருகே அம்மா சத்திரத்தில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக பயிற்சி விமானம் இன்று அவசரமாக தரையிறக்கப்பட்டது.

சாலையில் பயிற்சி விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதை அடுத்து அதன் முற்பகுதி சேதமடைந்தது.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் விமானத்தை அப்புறப்படுத்தினர்.

சாலையில் பயிற்சி விமானம் தீடிரென்று தரையிறங்கியதால் அப்பகுதியில் பரபரப்பு காணப்பட்டது.

*************

## பயிர் காப்பீடு

தமிழ்நாட்டில் விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க நாளை மறுநாள் கடைசி நாளாகும் என்பதால் பெரம்பலூர் கள்ளக்குறிச்சி அரியலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

*************

## இருவரி

**காஞ்சிபுரம் மாவட்டம் குருவிமலை** கிராமத்தில் 180 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

**சிவகங்கை மாவட்டத்தில் அரசு சார்பில்** தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் கடந்த 2 ஆண்டுகளில் 90 நீர்நிலைகள் சீரமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**திருச்சி மாவட்ட மைய நூலகத்தில் தேசிய** நூலக வார விழா நாளை முதல் வரும் 20ஆம் தேதிவரை நடைபெற உள்ளது.

வாசிப்பு மாரத்தான் என்ற தலைப்பில் ஆயிரம் வாசகர்கள் ஆயிரம் நூல்களை வாசிக்கும் நிகழ்வு நாளை நடைபெறும்.

**உதகையில் மழை நீர் சேகரிப்பு குறித்த** விழிப்புணர்வு பேரணியில் இன்று பதாகைகளை ஏந்தி சென்ற பள்ளி மாணாக்கர் துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர்.

**சேலம் மாவட்டம் ஏற்காட்டில் பிளாஸ்டிக் மற்றும்** குப்பைகள் அகற்றும் பணிகள் இன்று தொடங்கிவைக்கப்பட்டன.

*************

**திருவாரூர்**

திருவாரூர் மாவட்டத்தில் முறைகேடாக உர விற்பனை செய்த 36 கடைகளின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறிகிறார்.

**வாய்ஸ்**

*************

**ஈரோடு சிறுத்தை**

ஈரோடு மாவட்டம் திம்பம் மலை பகுதியில் சிறுத்தை நடமாட்டம் காணப்படுவதால் வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் பயணிக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*************

**திருப்பத்தூர்**

திருப்பத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் தெரு நாய்களுக்கு விஷ முறிவு ஊசி செலுத்தும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*************

**திருப்பூர்**

திருப்பூர் மாவட்டம் வாவிபாளையம் பகுதியில் பாசன வாய்க்கால் உடைந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்ததை அடுத்து அப்பகுதியில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*************

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை திருநெல்வேலி மாவட்ட மலை பகுதிகள் கன்னியாகுமரி தூத்துக்குடி நீலகிரி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றும் நாளையும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*************

## செஸ்

கோவாவில் நடைபெறும் உலக கோப்பை ஃபிடே செஸ் போட்டியின் 4ஆவது டை பிரேக்கர் சுற்றில் அர்ஜூன் எரிகேசி, பிரக்யானந்தா, பென்டாலா ஹறிகிருஷ்ணா ஆகியோர் இன்று பிற்பகல் களமிறங்குகின்றனர்.

*************

## வில்வித்தை

டாக்காவில் நடைபெறும் ஆசிய வில்வித்தை சேம்பியன் பட்ட போட்டியின் மகளிர் குழு பிரிவில் தீப்ஷிகா, ஜோதி சுரேகா, பிருத்திகா இணை தங்க பதக்கத்தை வென்றுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவில் அபிஷேக் தீப்சிகா இணை தங்க பதக்கத்தை கைப்பற்றியுள்ளது.

ஆடவர் பிரிவில் அபிஷேக், ஷாகில், பிரதமேஷ் இணை வெள்ளிபதக்கத்தை வென்றது.

*************

## பேட்மிண்டன்

ஜப்பானில் நடைபெறும் Kumamoto Masters பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் லக்ஷ்யா சென் முன்னேறினார்.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லக்ஷயா சென் - சிங்கப்பூரின் **Jia Heng Jason** -ஐ 21-13 21-11 என்ற நேர் செட்களில் வென்றார்.

*************

## கிரிக்கெட்

இந்திய தென்னாப்பிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நாளை தொடங்குகிறது.

சுப்மன் கில் தலைமையில் இந்திய அணி இதில் களமிறங்குகிறது.

இரு அணிகளுக்கிடையே 2 டெஸ்ட் போட்டிகள்

3 ஒருநாள் சர்வதே போட்டிகள்

5 20-20 கிரிக்கெட் போட்டிகள் அடுத்த மாதம் 19ஆம் தேதிவரை நடைபெற உள்ளன.

*************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**